Registered at the G. P. O. as a Newspaper கொழும்புப் பதிப்பு விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன்: 369 தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், சார்வரி மாசி 18-ஆம் நாள் ரம்ழான் 13. (1-3-61) புதன்கிழமை இதழ் 16

Jegajothi TOOTH POWDER
SEKAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

யாழ்ப்பாணம், மட்டக்களப்பில்

# இராணுவ, கடற்படை நடமாட்டம்

## கச்சேரிக்கு செல்வோரை தடுக்கின்றனர்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணக் கச்சேரிக்குச் செல்லும் முக்கிய வீதி முனைகளில் ஆயுதம் தாங்கிய கடற்படையினர் இன்று காவல் செய்கின்றனர். கச்சேரிக்கு முன்பாகவும் இவர்கள் நிற்கின்றனர்.

கடற்படையினரின் இந்த நடமாட்டம் நகரிலே மிகுந்த பரபரப்பை உண்டாக்கியிருக்கின்றது.

கூட்டம் கூட்டமாகக் கச்சேரிக்குச் செல்லும் பொதுமக்களை அங்கு செல்லவிடாமல் பொலிசார் தடைசெய்து வருகிறார்கள்.

கச்சேரியை நோக்கிச் சென்ற பொதுமக்களையும்; சத்யாக்கிரகத்தில் கலந்துகொள்ளச் சென்ற தொண்டர்களையும் ராணுவத்தினர் வழிமறித்தனர். என்றும், ஆயிரம் தொண்டர்கள் எப்படியோ ஒரு வழியாச் சென்று சதியாக்கிரகத்தில் கலந்து கொண்டனர் என்றும் மட்டக்களப்பிலிருந்து அறிவிக்கப்படுகிறது.

வித்தியாகந்தோர் முன்னிலையிலும் மறியல் நடைபெறுகின்றது. நல்லூர்த் தொகுதியில் கடைகள் மூடப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள் ஊர்வலமாக வீதிகளில் சுலோகங்களைக் கோஷித்துக் கொண்டு செல்கின்றனர்.

இன்று நல்லூர்த் தொகுதி எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தலைமையில் நல்லூர்த் தொகுதித் தொண்டர்கள் கச்சேரியிலும் வித்தியாகந்தோரிலும் மறியல் செய்கின்றனர்.

நல்லூர்த் தொகுதியைச் சேர்ந்த தொண்டர்கள் அதிகாலையில் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தபின்னரே கச்சேரிக்கும், வித்தியா கந்தோருக்கும் சென்று மறியல் இயக்கத்தில் கலந்துகொண்டனர்.

அரியாலையிலிருந்து 500 தொண்டர்கள் இன்று இந்த அறப்போரில் கலந்து கொண்டனர்.

கச்சேரியில் மறியல் செய்யும் பெண்மணிகளில் அநேகர் திருநீறு பூசிச் சந்தனப் பொட்டிட்டுத் தேவார திருவாசகம் ஓதிக்கொண்டிருக்கின்றனர்.

கச்சேரியின் முக்கிய வாயல்களைப் பொலிசார் காவல்புரிகின்றனர். யாழ்ப்பாணக் கச்சேரிக்கு அணித்தாகவுள்ள புகையிரதக் கடவைகளையும் பொலிசார் கண்காணித்துக் கொண்டு நிற்கின்றனர்.

வெள்ளை வேட்டி ஜிப்பா அணிந்து கொண்டு 'இரும்பு மனிதன்' நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் மிகுந்த உற்சாகத்துடன் தொண்டர்கள் மத்தியிலே போவதும் வருவதாகவும் காணப்பட்டார்,

காலை 7 மணிக்கு முன் கஸ்தூரி வீதியிலுள்ள வித்தியா கந்தோர் வாசல்களை பொலிஸார் காவல் செய்தனர். 7-45 க்குத் தொண்டர்கள் வித்தியா கந்தோர் முன் வந்து மறியலில் கலந்து கொண்டனர். மக்கள் கூட்டமும் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் நடவடிக்கை:

# கமிஷன் நியமிப்பதற்கு நிதி அமைச்சர் மறுப்பு

## எதிர்க்கட்சி கோரிக்கையை நிராகரித்தார்

— நமது கொழும்பு நிருபர் —

கொழும்பு

யாழ்ப்பாணம் கச்சேரியில் சென்ற வாரம் திங்கட்கிழமை பொலிசார் சத்தியாக்கிரகிகள்மீது குறுந்தடிப் பிரயோகம் செய்தது குறித்து விசாரணை நடத்தக் கமிஷன் ஒன்று நியமிக்கவேண்டுமென்று நேற்று பிரதிநிதிகள் சபையில் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் பலர் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டனர்.

நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எதிர்க்கட்சியினரின் கோரிக்கையை நிராகரித்துவிட்டார். எதிர்க்கட்சியினரின் விவாதத்துக்கு நிதிமந்திரி பதிலளித்துப் பேசுகையில் இரு தரப்பினிலும் தீவிரவாதிகள் இருக்கிறார்களென்றும் அவர்களின் நெருக்குதல்களுக்கு அரசாங்கம் பணிந்துவிடாதென்றும் கூறினார். தமிழர்கள் இந்த நாட்டில் தமக்கு இடமில்லையென்று எண்ணவேண்டியதில்லையெனவும் அப்படியான ஒரு நிலை அவர்களுக்கு வராதென தாம் அரசாங்கத்தின் சார்பில் வாக்குறுதி அளிப்பதாகவும் கூறினார்.

அரசாங்க அலுவலகங்களில் சிங்களத்தை உபயோகிப்பதற்கான சட்டத்தை அமுல் நடத்தும் முகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில்ள துவிதநெருக்கடிதகளும் ஏற்படுத்தப்படவில்லை. வடக்கு கிழக்கு, மாகாணங்களில் மக்களுக்கு விளங்காத மொழியில் நிர்வாகம்எதுவும் நடைபெறவில்லை. ஆனால் சமஷ்டிக்கட்சி மக்கள்மத்தியில் அரசகருமமொழி பற்றிதவறான கருத்தை ஏற்படுத்திவருகிறது என திரு.பண்டாரநாயக்கா கூறினார்.

"இன்னும் இருபது அல்லது முப்பது ஆண்டுகளில் நாடு முழுதும் சிங்களம் மட்டும் அரசகரும மொழியாகும் நிலைமை ஏற்பட்டே தீரும். அதை அவசர அவசரமாகச் செய்ய அரசாங்கம் விரும்பவில்லை. அதற்கு மாறாக நிர்வாகத் துறைகளிலும், நீதி பரிபாலனத் துறைகளிலும் ஒத்துழைப்பை அது எதிர்பார்க்கிறது" என்று நிதி மந்திரி மேலும் கூறினார்.

### திரு. தொண்டமான் பேச்சு

நியமனப் பிரதிநிதி திரு. எஸ். தொண்டமான் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

(6-ம் பக்கம் பார்க்க)

# நீதிமன்றத்தில் மறியல்

## திங்கட்கிழமை நடத்த வழக்கறிஞர் முடிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண நீதிமன்றத்தில் மார்ச் மாதம் 6-ந் திகதி திங்கட்கிழமை ஒரு நாள் அடையாள சத்தியாக்கிரகம் செய்வதென்று யாழ்ப்பாண நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

பெப்ரவரி 20-ந் திகதி சத்தியாக்கிரகம் செய்த தொண்டர்களிடம் பொலிசார் நடந்துகொண்ட முறையை வன்மையாகக் கண்டித்தும் பொலிசாரின் நடத்தை பற்றி அரசாங்கம் பகிரங்க விசாரணை நடத்த வேண்டுமென்று கோரியும் வழக்கறிஞர்கள் மற்றொரு தீர்மானம்நிறைவேற்றினர்.

யாழ்ப்பாண நீதிமன்ற வழக்கறிஞர் சங்கக் கூட்டம் திரு. சாம் ஏ. சபாபதி தலைமையில் நடைபெற்றது.

"நீதிமன்றத்தில் தொழில் நடத்தும் வழக்கறிஞர்களின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இச்சங்கம் நிறுவப்பெற்றது. இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றமொழி மசோதா விதிகளுக்கு நாம் எமது எதிர்ப்பைத் தெரிவிக்குமுகமாக நாங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றியது மட்டுமல்ல எங்கள் சொந்த கருத்தையும் தெரிவித்திருந்தோம்" என்று திரு. சாம் ஏ. சபாபதி கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

நாங்கள் நிறைவேற்றிய தீர்மானங்களின் பிரதிகள் நீதி மந்திரியிடம் சமர்ப்பிக்கப்பட்டன. நீதிமந்திரி யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு விஜயம் செய்தபோது நாங்கள் அவரைச் சந்தித்து இது விஷயமாக விவாதித்தோம். பலாத்காரமாக அரசாங்கம் திணிக்க முற்படும் மொழிக்கொள்கைக்கு பொதுவாக எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக தமிழ்ப் பேசும் மக்களின் இயக்கம் ஒன்று இன்று நடைபெற்று வருகின்றது. இந்த இயக்கத்திற்கு ஆதரவைத் தெரிவிக்கவேண்டியது எங்கள் கடமையென எங்களில் சிலர் கருதுகிறோம். எனவே நாங்கள் என்ன விதமான வழிவகைகளைக் கடைப்பிடிக்கவேண்டுமென்பது பற்றி முடிவு செய்வோம்.

சாத்வீகமான முறையில் சத்தியாக்கிரகம் செய்துகொண்டிருந்தவர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர் என்று கூறிய திரு. ஆர். விஸ்வநாதன், சத்தியாக்கிரகிகளைப் பொலிசார் தாக்கியதைக் கண்டித்தும் பொலிசார் நடத்தை பற்றி பகிரங்க விசாரணை நடத்தக் கோரியும் கொண்டு வந்த தீர்மானம் நியாயவாதி எஸ். நாகராஜா அனுவதிக்க ஏகமனதாக நிறைவேறியது.

திரு. எஸ். கதிரவேலு பேசுகையில் இந்த இயக்கத்திற்கு வழக்கறிஞர்களின் ஆதரவை

(6-ம் பக்கம் பார்க்க)

### களனி துருது பெரஹரா

கொழும்பு

இன்றும் நாளையும நடைபெறும் களனி துருது பெரஹராவை முன்னிட்டு விசேஷ போக்குவரத்து ஏற்பாடுகளை இலங்கைப் போக்குவரத்துச் சபை செய்திருக்கிறது.

### மணிவாக்கு

அடிமையாக இருக்கச் சம்மதிப்பவன் தனக்கும் துரோகி, கடவுளுக்கும் துரோகி.

—மாஜினி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு மாசி மீ 1௳ (1-3-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## பத்திரிகை நெறி பற்றி ஸ்ரீ நேரு

புதுடில்லியில் நடைபெற்ற அகில இந்திய பத்திரிகை ஆசிரியர்கள்சங்க மகாநாட்டில் பத்திரிகைத் தர்மம்பற்றி பிரதமர் ஸ்ரீ நேரு மிக அருமையான சில யோசனைகளை கூறியிருக்கின்றார். இந்த யோசனைகள் இச்சமயம் இலங்கைக்கும் மிகப் பயன்படுவதாயிருக்கும்.

"எந்த அரசாங்கமோ அல்லது தனிப்பட்டவர்களோ யாரும் தங்களைத் தாக்குவதை விரும்பமாட்டார்கள் தான். ஆனால் சாதாரணமாக ஓர் அரசாங்கம் பத்திரிகை கூறும் குணதோஷங்களை வரவேற்கும் அல்லது வரவேற்க வேண்டும். வஞ்சமோ கெட்ட எண்ணமோ இல்லாமல் கூறும் கண்டனங்கள் எவ்வளவு கடுமையாக இருப்பினும் காரியமில்லை. குணதோஷங்களை எடுத்துக் கூறுவது அவசியமென்றும் கூறுவேன்" என்கிறார் இந்தியப் பிரதமர்.

ஜனநாயக ஆட்சியிலே பெரும்பான்மை பலம் பெற்ற அரசாங்கம் அதிகாரத் திமிரில் கண்மூடித்தனமாகச் சில தவறுகளைச் செய்து விடுவது இயற்கை. அதை எடுத்துக் கூறி கண்டித்து, அரசாங்கத்தைத் திருத்த வேண்டியது பத்திரிகைகளின் மேலான கடமை. அப்போதுதான் அரசாங்கம் அதிக தவறுகள் செய்யாமலும், செய்த தவறுகளைத் திருத்திக்கொள்ளவும் மக்கள் அமைதியாக சுபீட்சத்துடன் வாழவும் முடியும். இலங்கையிலே முக்கிய பத்திரிகைகள் இவ்வித தங்கள் கடமையைச் செய்திருந்தால் இன்று இங்கு ஜனநாயக ஆட்சியே சீர்கெடவோ நாடு அமைதியாக முன்னேற முடியாமல் இருக்கவோ செய்யாமல் தடுத்திருக்கலாம்.

சென்ற பொதுத் தேர்தல் காலத்தில் சில பத்திரிகைகள் நடுநிலைமை தர்மத்தை விட்டு பாரபட்சமாகவும் எழுதின. புதிய அரசாங்கம் ஆத்திரமடைந்து, இங்கு இரு முக்கிய பத்திரிகை ஸ்தாபனங்களையும் தேச உடைமையாக்கி கார்ப்பரேஷன் நிர்வாகத்துக்கு மாற்றப்போவதாக அறிவித்தது. இப்படி எச்சரித்து பல மாதங்களாகியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த யோசனையையே அரசாங்கம் இப்போது கைவிட்டுவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. இது உண்மையாயின் வரவேற்கத்தக்கதே.

ஜனநாயகம் நல்ல முறையில் நடைபெற பத்திரிகைச் சுதந்திரம் அவசியமாகும். சுதந்திரம் என்பது மனம்போன போக்கில் கண்டபடி எழுதுவதல்ல பத்திரிகைகள் தங்களுக்குள்ளாகவே ஒரு சபையை அமைத்து பொது மக்களின் நலமைக்காக பாரபட்சமின்றி நேர்மையாக நடப்பது பற்றி கட்டுப்பாடுகளைத் தாங்களே வகுத்துக் கொண்டு அதைப் பின்பற்றுவது மிகச்சிறந்த முறையாகும்.

பொது மக்கள் நல்ல பத்திரிகைகளை விரும்புகிறார்கள். உண்மையான செய்திகளும், சிந்தனையைத்தூண்டி, ஒரு தீர்மானத்துக்கு வர உதவக்கூடிய நல்ல கருத்துகளும் அடங்கிய பத்திரிகைகளை அவர்கள் வரவேற்கின்றார்கள் என்கிறார் இந்தியப் பிரதமர். "தினசரிப் பத்திரிகைகளே இன்று பொது மக்கள் விரும்பிப்படிக்கும் தினசரி வேதமாகும். ஆகவே அத்தொழிலில் ஈடுபட்டவர்கள் தங்கள் மேலான பொறுப்பை உணர்ந்து அதற்குத்தக்க பத்திரிகைகளை நடத்தவேண்டும்" என்று மகாத்மா காந்தி உபதேசித்துள்ளார்.

இந்த உபதேசப்படி பத்திரிகைகள் இங்கு நடந்து மனித உரிமைகளையும், கடமைகளையும், ஜனநாயக தர்மத்தையும் பாதுகாக்கும் வகையில் தயவு தாட்சண்யமின்றி தொண்டாற்றுமாயின், இலங்கைப் பொது மக்களுக்கு அவை மிகமேலான தொண்டு செய்பவையாகும். விற்பனையையும், இலாபத்தையும் மட்டும் குறிக்கோளாகக் கொண்டிருப்பின் அப்பத்திரிகைகள் சமூகத்துக்கே தீங்காகும். இலங்கையில் பொறுப்புள்ள பத்திரிகைகள் கூறும் குறைகுற்றங்களையும், கண்டனங்களையும், அரசாங்கம், ஸ்ரீ நேரு கூறுவதுபோல் வரவேற்று திருத்திக்கொண்டால் அது தனக்குத்தானே மட்டுமன்றி நாட்டுக்கும் பெரிய நன்மை செய்து கொண்டதாகும்.

---

### பெரிய பலம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் யாழ்ப்பாணத்துக்கு நேரில் விஜயம் செய்து, இங்கு நடந்துள்ள பொலிஸ் கொடுமைகளைப் பகிரங்கமாகக் கண்டித்து, சத்தியாக்கிரகிகளின் அஹிம்சையையும் பாராட்டியுள்ளது இந்த இயக்கத்துக்கு மிகவும் பெரிய பலமாகும்.

தமிழ் மொழி உரிமைக்காக இப்போது வடக்கிலும், கிழக்கிலும் நடக்கும் போராட்டம் அப்பகுதி மக்களுக்கு மட்டுமன்றி, மலைநாட்டில் வசிக்கும் சுமார் 10 லட்சம் மக்களின் மொழி உரிமைக்காகவும், நடைபெறுவதாகவே கொள்ள வேண்டும். வேறு விஷயங்களில் வேற்றுமை இருப்பினும் தங்கள் தாய்மொழி உரிமை விஷயத்தில் தமிழர்களுக்கிடையே வேற்றுமைக்கு இடமில்லை. உயிர்போன்ற இவ்விஷயத்தில் வெற்றிபெற வேண்டுமாயின் இந்நாட்டில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களிடையே பூரண ஒற்றுமை அவசியம்.

இந்த ஒற்றுமை பொலிஸ் தடியடி காரணமாக எதிர்பாராத முறையில் அதிகரித்துள்ளது. இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், சைவத் தமிழர், கிறிஸ்தவத் தமிழர், இஸ்லாமியத் தமிழர் என்ற வேறுபாடுகளெல்லாம் மறைந்து, தமிழ் பேசும் மக்களெல்லாம், ஒருமுகமாகத் தங்கள் மொழி உரிமைப் போராட்டத்தில் ஈடுபட முன்வந்துள்ளது பெரிய காரியமாகும்.

அற்பத்தனமான குறுகிய அரசியல் புத்தியை விட்டு, பரந்த ராஜ்ய ஞானத்தைக் காட்டி அரசாங்கம் விரிந்த மனப்பான்மையுடன் இவ்விஷயத்தில் நடக்கவேண்டுமென்று திரு. இராஜலிங்கம் தமது அறிக்கையில் கேட்டுள்ளார். ஆனல் அரசாங்கம் இன்னும் குறுகிய வகுப்புவாத எண்ணங்களை விட்டதாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் இன்னும் சிங்களப் பொலிசாரே இருப்பதாயும், அவர்களிடம் குறுந்தடிகள் இருப்பதாயும், ஒரு மறுப்பை அரசாங்கம் பத்திரிகைகளுக்கு வெளியிட்டதே அவர்களது வகுப்புவாத மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது. இந்த மனப்பான்மை துரதிருஷ்டவசமாகும். இதை விட்டு, மேலான ராஜீய ஞானத்துடன் சிறுபான்மை மக்கள்பால் தாராளமனம் காட்டினலே நெருக்கடி தீர்ந்து நாடும் முன்னேற முடியும்.

---

மேயர், மாநகரசபை அங்கத்தவர்களுடன்

# சமசமாஜக்கட்சியினர் சத்தியாக்கிரகம் செய்வரா?

## திரு. துரைராஜசிங்கம் விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

மறியல் இயக்கம் ஆரம்பித்த தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சிலரையும் தொண்டர்களையும் யாழ்ப்பாணம் பொலிசார் மிருகத்தனமாக தாக்கியதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக யாழ்ப்பாண மேயரும் மாநகரசபை அங்கத்தவர்களும் இன்று புதன்கிழமை கச்சேரிக்குமுன் மறியல் செய்ய வேண்டுமென்று மாநகரசபையின் அவசரக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட போதிலும் இந்த ஒரு நாள் 'சத்தியாக்கிரகத்தில்' சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த இரு அங்கத்தவர்களும் சேர்வார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது.

பொலிசாரின் கண்மூடித்தனமான செயலை சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவர் எவரும் கண்டித்துப் பொதுக்கூட்டத்தில் பேசவோ வேறு நடவடிக்கைகள் எடுக்கவோ கட்சியின் மேலிடம் எவ்வித ஆட்சேபனையும் செய்யாது என்று சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவரும் மாநகரசபை அங்கத்தவருமான திரு. ஆ. துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சியினர் ஆரம்பித்து நடத்திவரும் மறியல் இயக்கம் பற்றியும், சத்தியாக்கிரகிகள் மீது பொலிசார் நடத்திய தாக்குதல் பற்றியும் எவ்வித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது பற்றி தென்னிலங்கையின் சமசமாஜக் கட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுத்துவருகிறார்களென்றும் பொலிசாரின் தாக்குதல் பற்றி டாக்டர் என். எம். பெரேரா பார்லிமெண்டில் பிரச்சினை கிளப்பவிருக்கிறார் என்றும் திரு. துரைராஜசிங்கம் கூறினார்.

ஆகவேண்டிய நடவடிக்கை பற்றி கட்சித் தலைமைப்பீடம் ஆலோசனை செய்து கொண்டிருக்கும் இச்சமயத்தில்கட்சியின் அனுமதி எதுவுமின்றிச் சத்தியாக்கிரகத்தில் சமசமாஜக் கட்சி அங்கத்தவர்கள் கலந்து கொள்வது கட்சிக் கட்டுப்பாட்டுக்கு முரணனது என்று திரு. துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

---

### பட்டதாரி மாணவர்கள்

யாழ்ப்பாணம்

இன்று யாழ்ப்பாணம் ஐந்து சந்தியிலிருந்து பட்டதாரிமாணவர்கள் யாழ்ப்பாணம் பிரதான வீதிகளின் வழியாக கச்சேரிக்குச்சென்று மறியல் இயக்கத்தில் கலந்துகொள்வார்கள் என்று ஒரு மாணவர் தெரிவித்தார். இம்மாணவர்களுடன் சிங்கள, ஆபிரிக்கமாணவரும் கலந்துகொள்வார்களாம்,

இம்மாணவர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் 250 ரூபாய் கொண்ட பணமுடிப் பொன்றையும் அளிப்பார்கள்.

---

முல்லைத்தீவில்

# சிங்களத் தொண்டர்களும் சத்தியாக்கிரகம் செய்தனர்

முல்லைத்தீவு

முல்லைத்தீவில் இன்றுஇரண்டாவது நாளாகத் தொடர்ந்து சத்தியாக்கிரகம் வவனியாப் பிரதிநிதி திரு. சிவசிதம்பரத்தின் தலைமையில் நடைபெற்று வருகிறது.

இன்று மற்றைய நாட்களைவிடத் தொண்டர்கள் அதிகமாகக் காணப்பட்டார்கள். சிங்களத் தொண்டர்களும் இன்று சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத் தக்கது.

நீதிமன்றத்தின் முன் நின்ற சத்தியாக்கிரகிகளைப் பொருட்படுத்தாது நீதிமன்றத்தைத் திறப்பதற்கு பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கை தோல்வியடைந்தது.

நீதிமன்றம் இன்றுடன் முடிவடைவதால் நீதிமன்றத்தின் முன்னல் நடத்தப்படும் சத்தியாக்கிரகமும் இன்றுடன் நிறுத்தப்படுமெனத் தெரிகிறது.

இன்று பங்கு பற்றிய தொண்டர்களுக்கு முல்லைத்தீவைச் சேர்ந்த வர்த்தகர்களும் உணவளித்தனர்.

வவனியாப் பிரதிநிதி திரு. சிவசிதம்பரத்தை சத்தியாக்கிரகம் பற்றிக் கேட்டபோது கூறியதாவது:

தொகுதியின் மற்றுப் பகுதிகளுக்கும் சத்தியாக்கிரகம் விஸ்தரிக்கப்படும். தொண்டர்களும் சேர்க்கப்படுவர். நிதியும் திரட்டப்படும். இதனைச் செயற்படுத்த செயற் குழு ஒன்று தெரிவார்கள்.

தென் இலங்கையில் வாழும் தமிழ்க் குடும்பங்கள் தமிழ்ப் பகுதிகளுக்கு வருமாறு வேண்டப்படுவர்.

வவனியா சிங்களப் பகுதிகளிலே கூட்டங்கள் நடாத்தி நிலைமையை விளக்கிச் சிங்கள மக்களின் அனுதாபத்தைப் பெற முயல்வார்கள்.

---

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலுள்ள தமிழ் வர்த்தகர்கள் தங்களுக்குள் 25 ஆயிரம் ரூபாய் வசூல் செய்து, தமிழ் உரிமைப் போராட்டத்துக்காக நேற்று அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

தமிழ் வர்த்தகர்களிடையே அதிக ஊக்கமும் உற்சாகமும் நிலவுவதாயும், தமிழ் சமூகத்தின் எதிர்காலமனைத்தும் இந்தப் போராட்டத்தின் முடிவையே பொறுத்துள்ளதாகவும், இது எப்படியும் வெற்றிபெற எல்லா முயற்சியும், உதவியும் செய்யவேண்டுமென்றும் வர்த்தகர்கள் முனைந்திருப்பதாயும் ஒரு வர்த்தக அன்பர் நேற்று என்னிடம் தெரிவித்தார்.

அந்த வர்த்தக அன்பருக்கு கூட்டுப்பிரார்த்தனைப் பித்து கொஞ்சம் உண்டு, யாழ்ப்பாணம் கச்சேரி முன்பாக சத்தியாக்கிரகிகள் கூட்டாகப் பக்திப் பாடல்களைப் பாடிவருவதைக் கேட்டு அவருக்கு மிக மகிழ்ச்சி.

கத்தோலிக்கர், தங்கள் பள்ளிக்கூட போராட்டத்தை நடத்துகையில் அவர்களது கோயில்களில் தினசரி விசேஷ பிரார்த்தனைகள் முதலியவற்றை நடத்திவந்தனர். அதுபோல் தமிழர்கள், உயிர்ப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இச்சமயத்தில், எல்லாக் கோவில்கள், வணக்க ஸ்தலங்கள் முதலியவற்றில், இப்போராட்டம் வெற்றிபெற இறைவன் அருள்வேண்டி, விசேஷ வழிபாடும், பிரார்த்தனையும் நடத்தவேண்டும் என்று கூறினர்.

இது ஒரு நல்ல யோசனை. நம்மில் பலரும் நமது கோவில்களைப்பற்றி இம்மாதிரி விஷயங்களில் நினைப்பது கூட இல்லை. நமது சொந்த குடும்ப நன்மைக்காகத்தான் எப்போதாவது கோயில்களுக்குச் செல்லுகிறோம். அதுவும் பெண்மணிகளின் வற்புறுத்தலால். சமூகநன்மைக்காகவும், நாட்டின் நன்மைக்காகவும் தெய்வ அருளை வேண்டி பொது ஸ்தலமான கோயில்களில் பிரார்த்தனை செய்வதில்லை.

ஆங்காங்கேயுள்ள கோயில்களிலும் வணக்க ஸ்தலங்களிலும், இச்சமயம் ஆஸ்திகர்கள் விசேஷ பிரார்த்தனைகளைச் செய்வது, இந்த இயக்கம் வெற்றிகரமாக சீக்கிரத்தில் முடிய திருவருள் சக்தியை நாடிப் பெற உதவியாக இருக்கும்.

கோயில்கள் சமூகத்தின் உயிர்போன்ற ஸ்தாபனங்கள். நமது பல சமூக பிரச்னைகளையும் வெற்றிகரமாகத் தீர்க்க நமது கோயில்களைப் பயன்படுத்துவதாயின் அவை புத்துயிர்பெற்று சமூகத்துக்கு உண்மையில் நல்ல பணி செய்வதாகும். மக்களும் தினசரி அதிகமாக கோயில்களுக்கு வந்து நலமடையலாம்.

* * *

மேற்கு இந்தியத்தீவைச் சேர்ந்த கிரிக்கெட் கோஷ்டியினரில் ஐந்து வீரர்கள் லண்டனுக்குச் செல்லும் வழியில் இலங்கையில் ஒரு பந்தயத்தில் விளையாட ஒழுங்கு செய்யப்பட்டது. அந்த கிரிக்கெட் வீரர்களையும் அவர்களது ஆட்டத்தையும் பார்க்க இங்கு எவ்வளவு ஆவல். நான்கு நாட்களுக்கு முன்பாகவே மூன்று ரூபாய் டிக்கெட் கிடைக்கவில்லை. எல்லாம் விற்பனையாகிவிட்டனவாம்.!

பணநெருக்கடி, கஷ்டம் என்றெல்லாம் சொல்லுகிறோம். அதிக கட்டணம் செலுத்தி, இந்த விளையாட்டைப் பார்க்க பெருந்திரள் கூடுவதைப் பார்த்தால் இலங்கையில் பண நெருக்கடியோ. கஷ்டமோ இருப்பதாக யாரும் கூற முடியுமா?

---

### ஒழுங்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம் புதன்

பருத்தித்துறையில் நேற்று நீதிமன்றத்தின் முன் உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரத்துடன்மறியல்செய்த சமசமாஜக்கட்சிப் பிரமுகர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் மீது கட்சியின் மேலிடம ஒழுங்கு நடவடிக்கை எடுக்க விரும்புவதாகக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

# கராச்சியில் பொலிஸ் - மாணவர் மோதல்

# 100பேர் காயம் ஒருவர்பலி

## பாகிஸ்தான் கலகம் தூண்டி விடப்பட்டது என்கிறார் நேரு

கராச்சி

**நேற்று கராச்சியில் பொலிசாருக்கும், மாணவர்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பின் காரணமாய் 100 பேர் காயமடைந்தனர். (இதில் பாதிப் பேர் பொலிசார்) துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாய் ஒருவர் கொல்லப்பட்டார்.**

ஜபல்பூரில் ஏற்பட்ட கலகம், லுமும்பா படுகொலை, ஆகியவற்றை ஆட்சேபித்து சுமார் 10,000 மாணவர்கள் கராச்சியில் ஊர்வலம் நடத்த முயன்றனர் என்றும், பொலிசார் கண்ணீர்ப்புகை, தடியடிப் பிரயோகம் ஆகியவற்றை நடத்தினரென்றும், இறுதியில் பொலிஸ் துப்பாக்கிப்பிரயோகத்தின் விளைவாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

ஆர்ப்பாட்டக்காரர்களில் 160 பேர் கைது செய்யப்பட்டனர். அதிர்ஷ்டவசமாக அருகேயிருந்த இந்திய ஹைகமிஷன் காரியாலயம் தாக்கப்படவில்லையென அறிவிக்கப்படுகிறது. நிலைமையைத் தொடர்ந்து கராச்சியிலுள்ள பாடசாலைகள், கல்லூரிகள் ஆகியன ஒருவாரம் மூடப்பட்டிருக்கின்றன. கராச்சியிலுள்ள "ஹிந்து" பத்திரிகை நிருபரும் காயமடைந்ததாய் அறிவிக்கப்படுகிறது.

கராச்சி கலகம்பற்றி, புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனரை இந்திய வெளிநாட்டிலாகா அழைத்துள்ளது.

### நேரு அறிக்கை

நேற்று புதுடில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் பிரதமர் நேரு பேசுகையில், பாகிஸ்தானில் நடைபெற்ற சம்பவங்கள் தூண்டிவிடப்பட்டவையாய் இருக்கவேண்டுமெனக் கூறினார்.

முதலாவதாக, வேண்டுமென்றே தாக்குதல் நடத்தத் தூண்டிவிட்டிருக்க வேண்டுமென்றும், இரண்டாவதாக, பொலிசார் இச்சம்பவங்களைப் பார்த்துக்கொண்டு, தலையிடாமல் இருந்திருக்கிறார்கள் என்றும் ஹைகமிஷன் தாக்கப்பட்டதற்கு நஷ்ட ஈடு கோரப்பட்டிருப்பதாயும் அறிவித்தார்.

"கடந்த ஒரு வாரமாகவே பாகிஸ்தான் பத்திரிகைகள் இந்தியாமீது துவேஷமூட்டும் வகையில் எழுதிவந்தன. அவற்றைப்படிக்கவே மனவேதனையாய் இருந்தது. இதுவே மக்களைத் தூண்டிவிடக் காரணமாய் இருந்தது" என்றார் நேரு.

பாகிஸ்தான் ஹைகமிஷனர், ஜபல்பூர் செல்லாமலிருக்குமாறு கேட்கப்படுவாரா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், எவரும் எங்கும் போவதைத் தடுப்பது அரசாங்கத்தின் வழக்கமில்லை என்றும், பாகிஸ்தான் அரசாங்கம் மனதில் என்ன கருத்துக்கொண்டிருந்தபோதிலும் இந்திய-பாகிஸ்தான் உறவுக்கு பாக். ஹைகமிஷனர் பாடுபட்டுவருகிறார் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

"ஜபல்பூர்" காலிகளுக்குப் பேர்போன இடம். வகுப்புவாதக் கலப்பற்ற மனப்பான்மைதான் உயிர் வாழ்வதற்கு அவசியமான வழி" என்றும் அவர் கூறினார்.

---

## இலங்கையில் அட்லி பிரபுவின் அலுவல்கள்

கொழும்பு

பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் அட்லிபிரபு, நேற்றுப் பிற்பகல் 2 - 15 க்கு விமான மூலம் கொழும்பு வந்திறங்கினார். அரசாங்கத்தின் சார்பாக மந்திரி ஸி. பி. டி. சில்வாவும் மற்றும் பலரும் அவரை வரவேற்றனர். தெஹிவளை நகரசபைஅட்லிக்கு ஒரு வரவேற்பு அளித்தது மாலையில் அவர் கவர்னர் ஜெனரலையும், பிரதமரையும் சந்தித்தார். பிரதமமந்திரி ஸ்ரீமதி பண்டாரநாயகா அவருக்கு, உத்தியோகரீதியில் இராப்போசன விருந்தொன்று அளித்தார்.

இன்று பேராதனை செல்லும் அட்லி பிரபுவுக்கு விசேஷ பட்டமளிப்புவிழா ஒன்றில் டாக்டர் என்ற கௌரவ விருது வழங்கப்படும். அட்லி அங்கு பட்டமளிப்புவிழாப்பிரசங்கம் நிகழ்த்துவார். வியாழக்கிழமை கால்பேஸ் ஹோட்டலில் நிருபர்மகாநாடு ஒன்றை நடத்துவார்.

அன்று பிற்பகல் கொழும்பு மாநகரசபை அவருக்கு ஒரு வரவேற்பு உபசாரம் நடத்தும். வெள்ளிக்கிழமை அட்லி பிரபு இலங்கையை விட்டுப் புறப்படுவார்.

---

## தொழிற் சங்கம் பதிவு செய்யப்பட்டது

கிளிநொச்சி

கரைச்சிப் பகுதி தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கமாக "கரைச்சிப் பொதுத் தொழிலாளர் சங்கம்" என்ற பெயரில் ஓர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு அண்மையில் சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்டது.

---

## மறியல் இயக்கத்தில் பங்குபற்ற இளைஞர் கழகம் தீர்மானம்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் மறியல் இயக்கத்தில் தாமும்பங்குபற்றி ஆதரவளிக்க புங்குடுதீவு இளைஞர் கழகம் தீர்மானம் செய்துள்ளது.

---

## சமசமாஜ வாலிபர் சங்கம்

கிளிநொச்சி சமசமாஜ வாலிபர் சங்க சம்மேளனத்தின் புது வருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்: வி. சிவபாதம், உப தலைவர்: ஏ. சிவஞானம், காரியதரிசி: எஸ். பொன்னையா, உப காரியதரிசி: எம். சதாசிவம், தனாதிகாரி: வி. இராசரத்தினம், உப தனாதிகாரி பி. கே. கந்தசாமி, கணக்குப்பரிசோதகர்: இ. கந்தையா. ஓர் கமிட்டியும் நியமிக்கப் பட்டது.

## ஐ. நா. காரியதரிசி பற்றிய பிரச்சினை பார்லிமெண்டில் நேரு பிரஸ்தாபம்

புதுடில்லி, திங்கள்.

ஐ. நா. பிரதம காரியதரிசி சம்பந்தமான பிரச்சினைகளை இப்பொழுது கிளப்புவதினால் ஐ. நா. ஸ்தாபனம் மேற்கொண்டுள்ள பயனளிக்கும் வேலைகளுக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுவிடும் என்று பாரதப் பிரதமர் திரு. நேரு கூறினார்.

திரு. ஹமர்ஷீல்டை பிரதம காரியதரிசிப் பதவியிலிருந்து நீக்குவதற்கு ஒத்துழைக்கும்படி கோரி ரஷ்யப் பிரதம மந்திரி திரு. குருஷேவ் பிரதமர் நேருவுக்கு அனுப்பியிருந்த ஒரு குறிப்பு பற்றி மேல்சபையில் அங்கத்தவர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே திரு. நேரு மேற்கண்டவாறு கூறினார்.

அரசியல் விவகாரங்கள் சம்பந்தமாக பிறநாட்டுத் தலைவர்களுக்கு தாம் எழுதும் கடிதங்களையோ அல்லது பிறநாட்டுத் தலைவர்களின் கடிதங்களையோ அப்பட்டமாக வெளியிடவேண்டிய நியதி இல்லையென்றும், ஆனால் அரசாங்கத்தின் கொள்கை வெளியிடப்படும் என்றும் சொன்னார்.

# கஸாய் தலைநகரை ஐ.நா. மேற்கொண்டது

## மொபுடுவின் துருப்புகளை அடக்கவும் முஸ்தீபு

லியபபோல்ட்வில்லி

**காங்கோவிலுள்ள ஐ. நா. துருப்புக்கள் எந்தக் குழப்பத்தையும் அடக்க முஸ்தீபுடன் இருக்கிறார்கள் என்றும், கஸாய் மாகாணத் தலைநகரத்தை ஐ. நா. மேற்கொண்டிருப்பதாயும் விமான நிலையம், ரேடியோ நிலையம் ஆகியவற்றை ஐ. நா. தன் ஆதிக்கத்தில் கொண்டு வந்திருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.**

காங்கோவில் குழப்பத்தைத் தடுக்க ஐ. நா. பலாத்காரத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்ற தீர்மானம் பந்தோபஸ்து சபையில் நிறைவேறியதைத் தொடர்ந்து ஜெனரல் மொபுடுவின் சிப்பாய்கள் ஐ. நா. சிப்பந்திகளை கண்டகண்டபடி தாக்கியும், இம்சித்தும், அவமானப்படுத்தியும் அக்கிரமம் இழைக்க ஆரம்பித்ததினால் ஐ. நா. மொபுடுவின் துருப்புக்களை பலாத்காரத்தால் எதிர்க்கப் போவதாய் எச்சரிக்கை விடுத்தது, இதைத் தொடர்ந்து தமது துருப்புக்கள் தாக்குதலில் ஈடுபடக்கூடாதென ஜனாதிபதி கஸவுபு அறிவித்துள்ளார். இதே சமயம் ஐ. நா. கஸாய் தலைநகரை தங்கள் பொறுப்பில் மேற்கொண்டுள்ளது.

---

## முதியோர் வகுப்பு

சுழிபுரம்

வடபகுதி கல்வி இலாக்காவினரால் பண்ணாகம் தெற்கில் முதியோர் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ் வகுப்புகள் ஸ்ரீ முருகன் நிலைய மண்டபத்தில் நடைபெறுகின்றது. இதற்குப் பொறுப்பாக சுழிபுரம் அரசினர் கல்லூரி ஆசிரியர் திரு. ந. தியாகராசா நியமிக்கப் பட்டுள்ளார்.

---

## திருக்கோணமலைக்கு நிதியமைச்சர் திடீர் விஜயம்

திருக்கோணமலை

ஜெட் விமானப் பயிற்சியொன்றைப் பார்வையிடுவதற்காக நிதி மந்திரி சமீபத்தில் திருக்கோணமலைக்கு வந்தபோது இங்குள்ள கச்சேரிக்கு திடீர் விஜயம் செய்தார். நகர மண்டபத்தில் கறுப்புக் கொடியொன்று பறந்து கொண்டிருந்தது.

மந்திரி திருக்கோணமலை வருவது ஏற்கனவே தெரிந்திருந்தால் கறுப்புக்கொடி வரவேற்பு ஒன்று கொடுக்கப்பட்டிருக்கும் என்று திரு இராஜவரோதயம் எம். பி. கூறினார்.

## ஹமர்ஷீல்டுக்கு பதில் இல்லை

நியூயோர்க்

காங்கோவில் ஐ. நா. படைக்கு 25,000 துருப்புக்கள் தேவையென 22 ஆபிரிக்க நாடுகளை திரு ஹமர்ஷீல்ட் கேட்டுக் கொண்டதற்கு இன்னும் சாதகமான பதிலில்லை எனக் கூறப்படுகிறது.

---

## கைமோசக் கொலைகள் அதிகரிப்பு

கொழும்பு

1961-ம் வருடம் நடைபெற்ற கைமோசக் கொலை, அதன் உச்சத்தை எட்டி விட்டது. பிப்ரவரி மாதம் மட்டும் 41 கைமோசக் கொலைகள் நடந்துள்ளன.

---

## மந்திரியைக் கட்டித் தழுவினர்

திருக்கோணமலை

போக்குவரத்து மந்திரி திரு. கலுகல்லைக்கு கிண்ணியாவில் அளிக்கப்பட்ட ஒரு பொது வரவேற்பின்போது, வெள்ளைச் சாரமும் நீலச் சட்டையும் அணிந்த ஒருவர் மந்திரியைக் கட்டித்தழுவியபின், ஏதோகூறி கைகளில் முத்தமிட்டார்.

---

## தமிழ் விஞ்ஞான பட்டதாரிகளுக்கு சிங்கள வகுப்பு

கொழும்பு

தமிழ் விஞ்ஞான பட்டதாரிகளுக்கு 4 வார சிங்கள வகுப்பொன்று மார்ச் மாதம் 2-ம் தேதி ஆரம்பமாகும். தேர்ஸ்டன் ரஸ்தாவில் இந்தவகுப்பு நடைபெறும். இறுதிப்பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு சிங்கள போதனமொழிப் பாடசாலைகளில் (வேலைகள் காலியாகும்போது) வேலையளிக்கப்படும்.





ஏக விநியோகஸ்தர்கள்:

செட்டிநாட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116/118 கெய்சர் வீதி, : : கொழும்பு.

# சிங்களத்தைத் திணிக்கும் எண்ணம் இல்லையாம்

## கிண்ணியாவில் மராமத்து மந்திரி

திருக்கோணமலை

"எவர்மீதும் சிங்களத்தைத் திணிக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை. எல்லா சமூகங்களும் தம் தம் மொழிகளை உபயோகித்துக் கொள்ளும் உரிமை வழங்கப்படும்".

இவ்வாறு போக்குவரத்து மராமத்து மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல மூதூர் தொகுதியிலுள்ள கிண்ணியா என்ற இடத்தில் கூறினர்.

தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் திரு. கலுகல்ல மேலும் குறிப்பிட்டதாவது:-

சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூன்று சமூகத்தினரும் மூதூரில் சமரசமாக வாழ்கின்றுர்கள். இது எல்லோராலும் போற்றப்பட வேண்டியதொன்ருகும்.

நாட்டின் பொருள்வளம் பெருகவேண்டும். அப்பொழுது தான் வாழ்க்கைத்தரம் உயர முடியும். நாட்டின் வளம் எல்லா மக்களுக்கும் பயன்படுவதாக இருக்க வேண்டும். தற்போதைய அரசாங்கம் சோஷலிஸ வழியில் செல்கிறது. எனவே மக்களின்வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அது தன்ஞல்ஆன எல்லா முயற்சிகளையும் செய்யும்!

## 20,739 தந்திகள் தாமதம்

கொழும்பு

மத்திய தந்திக் கந்தோரில் ஜனவரி 23-ம் தேதிக்கும் 31ம் தேதிக்குமிடையில் 20,739 தந்திகள் அதே தினத்தில் அனுப்பப்படவில்லை என்றும் லுனைவயிலிருந்து முதல்நாள் காலை கொள்ளுப்பிட்டிக்கு 8-30 க்கு அனுப்பியதந்தி மறுநாள் காலை 9-30க்கு கிடைத்ததென்றும் "போஸ்ட்மார்க்" என்னும் தபால் அதிகாரிகள் யூனியனல் பிரசுரிக்கப்படும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

ஏனெனில்,

அது எனக்கு

எவ்வளவோ

நன்மையளிக்கின்றது..






நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம் இது மோல்ட்டட்பார்லி மற்றும் கோதுமைமாவுடன் முழுப்பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, $B_2$, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள் மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B 1 சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப்பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ட்ஸ் (சிலோன்) லிமிட்டெட், த. பெ. 189 கொழும்பு.

ஒவ்வொருவரும் விரும்பி அருந்தும் இந்த நெஸ்டோமோல்ட் அபாரநன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன இழந்த சக்தியை மீட்டுத் தரவும், ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்ட்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பது தான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி அலாதியானது.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B1 அடங்கியது.


## வரிவிளம்பரம்


**NOTICE**

I Annammah wife of Sebanayagam Reginald Francis of Chankanai East, Jaffna, Ceylon do hereby inform the Government of Ceylon and the General public that I am the lawful Attorney in Ceylon of my Brother-in-law V. K. Francis of Chankanai East presently of Aljunied Road, Singapore, by virtue of Power of Attorney dated 31st January 1961 executed at Kluang by Victor Kanudurai Francis in the presence of Charles Peng Siong Wong Advocate Solicitor of the Supreme Court of Federation of Malaya.

The Public is also informed that the Power of Attorney granted to C. S. Ponniah of Chankanai East earlier is revoked and cancelled and the public is hereby advised not to have any further transactions with the said C. S. Ponniah, all persons are kindly requested to communicate with me or my Proctor S.T. NadaRajah of Sandilipay.

Mrs. S. R. Francis

Advt. 45.


## மீண்டும் விசாரணை

கொழும்பு

கள்ளக்கடத்தலில் ஈடுபட்டதாக கடற்படை அதிகாரிகள் சிலர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணைகளை பொலிசார் மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

இந்தக்குற்றச் சாட்டுகள் பற்றி இரகசியப் போலிசார் கடந்தவார இறுதியில் கடற்படையைச் சேர்ந்த கமாண்டர் டி. வி. ஹண்டர், தளபதி ஐ. பி. மரே ஆகியவர்களை விசாரணை செய்தனர்.

## மழையில்லை விவசாயிகள் கவலை

புதுக்குடியிருப்பு

புதுக்குடியிருப்பு பகுதியில் கடந்த ஒரு மாதமாக நல்ல மழை இல்லாததால் நெல் வயல்கள் பாதிக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. சில இடங்களில் அங்குமிங்கும் தூறல் மழை பெய்வதால் விளையும் தறுவாயிலுள்ள நெற்பயிர்கள் மோசமடையக்கூடும் என்று விவசாயிகள் அஞ்சுகிருர்கள்.

## வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மீண்டும் வேலைக்கமர்த்தப்படுவர்

கொழும்பு

உதவிபெறும் பாடசாலைகள், பயிற்சிக்கல்லூரிகள் (விசேஷ ஷரத்து) மசோதா செனட் சபையில் நிறைவேறுவதை உதவிபெறும் பாடசாலைகளிலிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள்.

கல்வி இலாகாவிடம் முன்கூட்டியே அங்கீகாரம் பெருமல் வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை உதவிபெறும் பாடசாலைகள் மீண்டும் வேலைக்கமர்த்திக் கொள்ள வேண்டுமென்று இந்த மசோதாவில் விதியேற்படுத்தப்பட்டிருக்கிறது.

மசோதா நிறைவேறும் பட்சத்தில் உதவிபெறும் பாடசாலைகளிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் 14 நாட்களுக்குள் மீண்டும் வேலைக்கமர்த்திக் கொள்ளப்பட வேண்டும்.

# காமன்வெல்த் பார்லிமெண்டுக்கு தமிழர் பிரச்சினை

## இரு பிரதிநிதிகள் இலங்கை விஜயம்

காமென்வெல்த் பார்லிமெண்ட் கமிட்டியைச் சேர்ந்த இரு பிரதிநிதிகள் இலங்கைக்கு ஞாயிறன்று வந்து, ஐயந்து நாட்கள் தங்கியிருக்கிருர்கள். இலங்கையிலுள்ள தமிழ் சமூகத்தினரின் நிலைமையையும், பிரச்சினையையும் விளக்கி அவர்களிடம் ஒரு மகஜர் சமர்ப்பிக்க சில தமிழ்த் தலைவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

## தமிழ் 'ஸ்ரீ' கார் அதிகம

ஊர்காவற்றுறை

ஊர்காவற்றுறையில் இப்பொழுது தமிழ் 'ஸ்ரீ' பொறித்த கார்களின் நடமாட்டம் அதிகரித்திருக்கிறது. சிங்கள 'ஸ்ரீ'க்குப் பதிலாக தமிழ் 'ஸ்ரீ' பொறிக்கும்படி கார் சாரதிகளை ஊர்காவற்றுறை சனசமூக நிலயத்தினர் கேட்டு வருகின்றனர்.

# பூரணசுதந்திரம்தான் போராட்டத்தின்நோக்கம்

## டாக்டர் நாகநாதன் அறிக்கை

யாழ்ப்பாணம்

"தமிழ்ப் பேசும் மக்கள் நடத்திவரும் சத்தியாக்கிரக இயக்கத்தின் நோக்கம் தமிழ் மொழியைப் பாதுகாப்பது மாத்திரம்தான் என்று சிலர் எண்ணக்கூடும். அப்படியல்ல. தமிழ்ப் பேசும் மக்களின் பூரண சுதந்திரத்தைப் பெறுவதே இதன் நோக்கம், மொழி உரிமையைப் பெறுவது இவ்வியக்கத்தின் ஒரு அம்சமாகும்" இவ்வாறு நல்லூர்த் தொகுதி எம். பி. டாக்டர் நாகநாதன் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

தமிழ்ப் பேசும் மக்கள் இப்பொழுது நடத்திவரும் விடுதலை இயக்கத்தைப்பற்றி சிலர் கொண்டிருக்கும் தப்பான அபிப்பிராயங்களை நீக்குவதற்காக டாக்டர் நாகநாதன் விடுத்திருக்கும் அந்த அறிக்கையில் பின்வரும் விஷயங்களையும் குறிப்பிட்டிருக்கிருர்.

சிங்கள மக்களுக்குத் தங்கள் மாகாணங்களைத் தாங்களே ஆட்சி செய்ய எவ்வளவு உரிமை உண்டோ அவ்வளவு உரிமை தமிழ்ப் பேசும் மக்களுக்கும் தங்கள் தங்கள் மாகாணங்களைத் தாங்ளே ஆட்சி செய்ய உண்டு. ஆகவே, தமிழ் மாகாணங்களில் சிங்கள மொழியைத் திணிக்க முயற்சிப்பது ஜனநாயகத்துக்கு முரணதாகும். தமிழ்ப் பேசும் மக்கள் சிங்கள ஆதிக்கத்துக்குத் தலை பணிய மாட்டார்கள் என்பதும், மன உறுதியுடனும் சோர்வில்லாமலும் தொடர்ந்து தியாகங்களைச் செய்ய முன்வருவார்களென்பதும் சில தினங்களாக நடைபெற்றுவரும் சத்தியாக்கிரகத்தின் மூலம் அறிந்து கொண்டோம்.

இப்புனித போராட்டத்தில் இன்னும் ஆயிரக் கணக்கில் தொண்டர்கள் சேர்ந்து கடமை, கட்டுப்பாடு, ஒழுக்கம், அஹிம்ஸை முதலிய பண்புகளோடு அறப்போர் புரிய முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேம்.

# எழுத்தாளருக்குப் பாராட்டு

## சொக்கனின் இலக்கியப் பணி

யாழ்ப்பாணம்

"எழுத்தாளர் ஆத்மதிருப்திக்காக மாத்திரம் எழுதுபவரல்லர். அவர்கள் புகழையும்விரும்பித்தான் எழுதுகின்றனர். இதனை அனைவரும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்." இவ்வாறு எழுத்தாளர் க.சொக்கலிங்கம்(சொக்கன்) தமக்கு ஏற்படுத்தப்பெற்ற பாராட்டுக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். இக்கூட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. டாக்டர் நந்தி தலைமை வகித்தார். 'சிலம்புபிறந்தது' எனும் நாடகத்தை எழுதி இலங்கைப் பல்கலைக்கழகம் நடாத்திய போட்டியில் முதற்பரிசு பெற்றதைப் பாராட்டுவதற்காகவே இக்கூட்டம் ஏற்படுத்தப்பட்டது.

நாவலாசிரியராகவும் சிறுகதை எழுத்தாளனாகவும் கவிஞனாகவும் விளங்கும் சொக்கனின் எழுத்துக்களைச் சிறுகதை ஆசிரியர் திரு.டொமினிக் ஜீவா தமது வரவேற்புரையிற் பெரிதும் பாராட்டிப் பேசினுர். இலங்கையின்சூழலைப்பின்னணியாகக்கொண்ட சரித்திரநாவல்களைச் சொக்கனைப்போன்ருேர் எழுதி உதவ வேண்டுமெனத் திரு. இ. மகாதேவன் கேட்டுக் கொண்டார்.

இலக்கியவிமர்சகர் திரு. கனக. செந்திநாதன், 'இளங்கீரன்' நூல்நிலையப் பொறுப்பாளர் திரு. கா. மாணிக்கவாசகர் ஆகியோரும் சொக்கனின் இலக்கியசேவைகளைப் பாராட்டினர்.

# மறியல் செய்வது ஏன்?

## சமசமாஜக் கட்சிப் பிரமுகர் விளக்கம்

பருத்தித்துறை

பருத்தித்துறையைச் சேர்ந்த வழக்கறிஞரும். லங்கா சமசமாஜககடசிப் பிரமுகருமான திரு. ஆர். ஆர். தாமரத்தினம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கடந்த 20-ம்தேதி தமிழரசுக் கட்சித் தொண்டர்களைப் பொலிசார் தாக்கிய செயலை ஆட்சேபிக்கும் முகமாகவும் தமிழ்ப்பேசும் மக்களிடையே மொழிவிஷயத்தில் எவ்வித வேறுபாடும் கிடையாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளவும் பருத்தித்துறை மாஜிஸ்ரேட் கோட்டுக்கு முன்ஞல் இன்று நாங்கள் மறியல் செய்கிருேம்.

ஆங்கிலம் அகற்றப்படவேண்டும் என்பது சரியே. ஆனல் அந்த இடத்தில் சிங்களத்தை மட்டும் வைப்பதென்பது சரியாகாது. தமிழும் அந்த இடத்தில் வைக்கப்படவேண்டும்.

தமிழ் மக்களின் பூரண திருப்திக்கேற்ற வகையில் மொழிப்பிரச்சனை தீர்க்கப்படாவிட்டால் அரசாங்கம் உத்தேசித்துவரும் சோசலிசத்தை நாட்டில் நிறுவமுடியாது. தமிழ் மக்களின் ஒத்துழைப்புடனேதான் இந்த இலட்சியம் சாத்தியமாகும். நாம் மெதுவாகவும்,நேராகவும் ஒரு பொருளாதார நெருக்கடியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிருேம். அதைத் தவிர்ப்பதே நம் பிரதான வேலை.

இக் கட்டத்திலாவது நம் அபிப்பிராயபேதங்களை மறந்து மேற்கூறிய பிரதான வேலையை மேற்கொள்வோமாக.

## ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் அவசர நிர்வாகசபைக் கூட்டம் தலைவர் திருமதி பூ. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.

தமிழ் உரிமை கோரி சத்தியாக்கிரகம் செய்த தொண்டர்கள்மீது பொலிசார் நடத்திய தடியடிப்பிரயோகம் குறித்து கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

சத்தியாக்கிரகிகளையும், கச்சேரி ஊழியர்களையும் போலிசார் தாக்கியதான குற்றச்சாட்டுகள் குறித்து பாரபட்சமற்ற. விசாரணை நடத்தும்படி பிரதம மந்திரியையும், பொலிஸ் அதிபரையும் கேட்டுக்கொண்டார்.

தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இது சம்பந்தமாக அடுத்த 8-ம் திகதி ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.


ஆரம்ப தினம் மார்ச் 3-ந் திகதி வெள்ளி முதல்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீ கிருஷ்ண (திருக்கோணமலை) விஜிதா (மஸ்கேலியா) மொடர்ன் (பதுளை)

என். டி. ராமராவ் - சௌகார் ஜானகி

வி. நாகையா — குசலகுமாரி
டி. எஸ். பாலையா — டி. ஆர். ராமச்சந்திரன்
பி. கண்ணும்பா — விஜயலட்சுமி
கிரிஜா — ஓ. ஏ. கே. தேவர்
பி. எஸ். வீரப்பா — ராஜநலா
மோகன — எஸ். வரலட்சுமி

மற்றும் பலர் நடித்த



# ராஜ சேவை

பின்னணி:
திருச்சி லோகநாதன், ஏ. எல். ராகவன், கண்டசாலா, எஸ். ஸி. கிருஷ்ணன், பி. சுசீலா, பி. லீலா, எஸ். ஜானகி

டைரக்ஷன்: கே. காமேஸ்வரராவ்
சங்கீதம்: டி. வி. ராஜா
வசனம் - பாடல்கள்: தஞ்சை ராமையாதாஸ்

ஜெமினி கணேசன் சரோஜாதேவி நடித்த

# கைராசி

கடைசி வாரம்!

# பருத்தித்துறையில் மறியல்

## உடுப்பிட்டி எம். பி.

## சமசமாஜப் பிரமுகர் தலைமையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**தமிழ்க்காங்கிரஸ் பிரமுகரும் உடுப்பிட்டித்தொகுதி எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரமும், லங்கா சமசமாஜக்கட்சிப் பிரமுகர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினமும் இன்று பருத்தித்துறை நீதி மன்றத்தில் மறியல் செய்கின்றனர்.**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன் மறியல் செய்த தமிழரசுக் கட்சித் தொண்டர்களை பொலிசார் தாக்கியதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாகவும் தமிழ்ப் பகுதிகளிலும் தமிழ்ப் பகுதிகளிலுள்ள நீதிமன்றங்களிலும் சிங்களத்தைத் திணிப்பதை எதிர்க்கு முகமாகவும் இன்று காலை ஆரம்பமான மறியல் இயக்கத்தில் சுமார் 300 தொண்டர்கள் கலந்து கொண்டனர். பருத்தித்துறையைச் சேர்ந்த நியாயவாதிகளும் இந்த மறியல் இயக்கத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

நீதிமன்றத்திலுள் நீதவான் அதிகாலையிலேயே சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. என்றாலும் குமாஸ்தாக்களோ இதர ஊழியர்களோ உட்செல்ல முடியாதவாறு நீதிமன்றத்தின் முன் மறியல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இருகட்சிப் பிரமுகர்கள் தலைமை தாங்கி நடத்தும் இந்த மறியல் இயக்கத்தில் எந்தக் கட்சிக் கொடிகளும் பறக்க விடப்படவில்லை. கறுப்புக் கொடிகள் மட்டுமே பறந்து கொண்டிருக்கின்றன.

கம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகர்கள் கலந்து கொள்ளவில்லை. தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் கச்சேரிமுன் மறியல் செய்து கொண்டிருக்கின்றனர்.

அமைதியாக நடைபெறும் மறியல் இயக்கத்தை பொலிசார் அமைதியாக நின்று கண்காணித்துக் கொண்டுள்ளனர்.

"குண்டாந்தடிக்குக் குனிந்து கொடுக்க மாட்டோம்", "கண்ணீர்ப்புகையால் கலைந்து விடமாட்டோம்" என்பன போன்ற சுலோக அட்டைகளை மறியல் செய்பவர்கள் தாங்கிக் கொண்டிருந்தனர்.

### கிளிநொச்சியில் மறியல்

யாழ்ப்பாணம், புதன்

லங்காசமசமாஜக்கட்சியைச் சேர்ந்த திரு. ஆனந்தசங்கரிய தலைமையில் இன்று கிளிநொச்சியில் மறியல் இயக்கம் நடைபெறுமெனத்தெரியவருகிறது.

# தொண்டர்களை மறியல் செய்த பொலிசார்!

## அரை மணி நேரத்தில் பின்வாங்கினர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**கச்சேரிமுன் மறியல் செய்யும் சத்தியாக்கிரகிகளிடமிருந்து யாழ்ப்பாணப் பொலிசார் சிலர் இன்று பின்வாங்கவேண்டி நேரிட்டது.**

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் தலைமையில் இன்றைய மறியல் இயக்கம் கச்சேரி வாசலில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**பொலிசார் முந்தினர்**

இன்று அதிகாலையில் தொண்டர்கள் கச்சேரிக்கு வந்துசேரு முன்பே அங்குவந்து சேர்ந்த சில பொலிஸ்காரர் பிரதான வாசலுக்கு அருகேயுள்ள சிறிய வாசலை ஆக்கிரமித்துக்கொண்டனர். மறியல் செய்ய வந்த தொண்டர்கள் தங்களுக்கு முன்பே பொலிசார் அங்கு "மறியல்" செய்ய ஆரம்பித்துவிட்டதைக் கண்டதும் அவர்களைச்சூழ்ந்துநின்றுகொண்டனர். பொலிஸ் காரர்களை மத்தியில் வைத்து தொண்டர்கள் சூழ்ந்து நின்றதால் வீதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. தொடர்ந்தும் அங்கு நின்றால் நிலைமை எப்படிமாறுமோவென்று அஞ்சிய பொலிஸ்காரர் தங்கள் 'மறியலை'க் கைவிட்டு தொண்டர்களுக்கு விட்டுக்கொடுத்து பின்வாங்கிக் கொண்டனர்.

'ஒல்ட்பார்க்' வாசலில் மறியல் செய்யும் இளந் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 50 தொண்டர்கள் இன்று மட்டும் உண்ணாவிரதமிருக்கின்றனர்.

**சைவ, கிறிஸ்தவ பக்திப் பாடல்கள்**

மறியல் செய்யும் தொண்டர்கள் ஒரு புறத்தில் சிவபுராணம் தேவார திருவாசகமும் மற்றொரு புறத்தில் கிறிஸ்தவமதத்தைச் சேர்ந்த சத்தியாக்கிரகிகள் கிறிஸ்தவ பக்திப் பாடல்களும் பாடிக் கொண்டிருந்தனர்.

### சிறுபான்மைத்தமிழர்

யாழ்ப்பாணம்

சிறுபான்மைத்தமிழரும் தமது தாய்மொழியாகிய தமிழின உரிமையைப்பாதுகாப்பதற்காக சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளத்தீர்மானித்துள்ளனர். அதற்குரிய ஆயத்தங்களைச்செய்துகொண்டிருக்கிறார்கள் எனச்செய்தி எட்டியுள்ளது:

அவர்கள் தமக்கென ஒரு நாளைத்தேர்ந்தெடுத்து தமிழரசுக்கட்சி செயற்குழுவுடன் ஆலோசனைசெய்து சத்தியாக்கிரகம் செய்வார்கள்.

**அரியாலை வட்டாரம்**

யாழ்ப்பாணம் கச்சேரி முன் சத்தியாக்கிரகம் செய்வதாக தமது வட்டாரங்களை அழைக்கும் நோக்கத்தோடு வெளியிட்டிருக்கும் துண்டுப்பிரசுரத்தில் அரியாலை வட்டாரப்பிரதிநிதி திரு.கா.ச.நடராசா தெரிவித்திருப்பதாவது: தமிழ் பேசும் இனத்துக்குள் பல்வேறு கட்சிகள், சாதிகள், சமயங்கள் முதலிய பிளவுகள் இருந்தபோதிலும், கிணற்றில் விழுந்தவனை எவ்வாறுகாப்பாற்றதுடிதுடிப்பார்களோ அவ்வாறே இந்த மோசமான நிலையில் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி பங்கு பற்றவேண்டும்.

அரியாலை மக்கள் இன்று சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்கிறார்கள்.

### எம். பி. யின் மறியல் ஒத்தி வைப்பு

யாழ்ப்பாணம், புதன்

நாளை வியாழக்கிழமை கச்சேரி முன் மறியல் செய்வதாக முன்னர் அறிவித்திருந்த யாழ்ப்பாணம் எம்.பி. திரு.ஏ.ரி.துரையப்பா தமது யோசனையை இப்பொழுது மாற்றியுள்ளார்.

திங்கட்கிழமை நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுடன் திரு. துரையப்பா மறியல் செய்வார்.

### நீதிமன்றத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் தெரிவிப்பதற்காக ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறினர். ஒரு நாளைக்கு குறிப்பிட்ட ஒரு இடத்தில் சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமென்று கோரும் தீர்மானத்தை திரு. கதிரவேலு பிரேரிக்க அட்வகேட் எஸ். எம். எச். சாகிது அனுவதித்தார். தீர்மானம் நிறைவேறியது.

"பெரும் அதிருப்தி ஏற்படாமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளைக் காலதாமதம் செய்யாமல் அரசாங்கம் எடுக்க வேண்டும்" என்று கூறும் தீர்மானத்தை திரு. கதிரவேலு கொண்டுவந்தார். தீர்மானம் நிறைவேறியது.

**பங்கு கொள்ள வேண்டும்**

'எங்கள் மொழி உரிமைக்காக நடைபெறும் போராட்டத்தில் கட்சிவேறுபாடின்றி சகல தமிழ்ப் பேசும் மக்களும் அனுதாபிகளும் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும் தீர்மானமொன்றை திரு. ஜிம்மி இராஜரத்தினம் கொண்டுவந்தார். அட்வகேட் ஆனந்தகுமாரசாமிஅனுவதிக்க தீர்மானம் நிறைவேறியது.

**நீதிமன்றத்தில் சத்தியாக்கிரகம்**

"மார்ச் மாதம் 6-ந் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாண நீதிமன்றத்தில் இச் சங்க அங்கத்தவர்களும் அனுதாபிகளும் ஒரு நாள் அடையாள சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும்" என்னும் தீர்மானத்தை திரு. ஏ. ரி. துரையப்பா எம். பி. கொண்டுவந்தார். திரு. ஆர். விசுவநாதன் அனுவதிக்கத் தீர்மானம் நிறைவேறியது.

இத் தீர்மானங்களின் நகல் பிரதியொன்று யாழ்ப்பாண வழக்கறிஞர் சங்கத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

### சீன புனிததந்தம் கூட்டுக் காட்சி எதிர்ப்பு

கொழும்பு

சினப்புனிதத் தந்தத்தை கண்டி தலதா விலுள்ள புனிதத் தந்தச்சுடன் கூட்டமாக் காட்சிக்கு வைக்கப்பட வேண்டு மென்ற யோசனையை மல்லத்தை அய்கிரிய மகனுயக தேரோக்கள் எதிர்த்திருக்கின்றனர். எனவே சீனத்துப்புனித தந்தம் தனியாக காட்சிக்கு வைக்கப் படுமெனத் தெரிகிறது,

### நிதியமைச்சர் மறுப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம் ஒன்று இயற்றப் பட்டுவிட்டால் அது உடனே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று நிதிமந்திரி தெரிவித்திருக்கிறார். வரிவிதிப்புக்கான சட்டங்களைப் பொறுத்தவரை அவர்களுக்குச் சரியாக இருக்கலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் ஜீவாதார உரிமைகள் சம்பந்தமான சட்டம் இயற்றப்படும்போது சம்பந்தப்பட்ட மக்களின் அங்கீகாரமின்றி அதை அமுல் நடத்தமுடியாது.

திருவாளர்கள் பேர்னட் சொய்ஸா, பீட்டர் கெனமன் ஆகியோரும் பேசினார்கள்.

### மட்டக்களப்பில் மறியல் இயக்கம்

மட்டக்களப்பு செவ்வாய்

தமிழரசுக் கட்சியின் நேரடி நடவடிக்கையில் இரண்டாவது அம்சமான மறியல் இயக்கம் இன்று மட்டக்களப்பில் ஆரம்பமானபோது சுமார் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் அதில் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு கச்சேரியின் முன்றலில் மறியல் இயக்கம் கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் மட்டக்களப்பு முதல் எம். பி. திரு. எஸ். இராசதுரை ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பில் நேரடி நடவடிக்கையின் இரண்டாவது கட்டமான மறியல் இயக்கம் வெற்றிகரமாக நடைபெற்றது. நூற்றுக்கணக்கான பொது மக்கள் மறியல் இயக்கம் நடைபெறும் இடத்துக்கு வந்து குழுமியிருந்தனர்.

### உறுதி பூண்டால் யார் என்ன செய்ய முடியும்

**ஞானப்பிரகாச விழாவில் பண்டிதர் இரத்தினம் உரை**

யாழ்ப்பாணம், புதன்

"நியாயமான அளவு தமிழ் மொழி உபயோகச் சட்டம் வந்துதான் தமிழ் மொழியைப் பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை. சகல அலுவல்களையும் தமிழிலேயே செய்வதென்று ஒவ்வொரு தமிழனும் 24 மணி நேரத்துக்குள் திட உறுதி பூண்டு விட்டால் எந்த அரசாங்கமும் தமிழ் மொழியை ஒதுக்கித் தள்ளவோ ஒழித்துக்கட்டவோ முடியாது" என்று பண்டிதர் கா. பொ. இரத்தினம் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடைபெற்ற சுவாமி ஞானப்பிரகாசர் நினைவு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நகரமண்டபத்தின் முன் சுவாமி ஞானப்பிரகாசரின் உருவப் படம் பொறிக்கப்பட்ட கொடியை பண்டிதர் இரத்தினம் ஏற்றிவைத்தார்.

"தமிழ் மொழி வரலாற்றிலேயே ஒரு பல்கலைக் கழகம் செய்ய வேண்டிய பெரிய வேலையை தனி ஒருவராகச் செய்து முடித்தவர் சுவாமி ஞானப்பிரகாசர். தமிழ் மொழிக்கு உரிமை பெறப் போராட்டம் நடைபெறும் இச்சமயத்தில் தமிழ்ப் பெரியார் ஞானப்பிரகாசரை நினைவு கூர்வது சாலப் பொருத்தம்" என்று பண்டிதர் இரத்தினம் கூறினார்.

உதவி மேயர் திரு. நா. த. செல்லத்துரை வரவேற்புரை நிகழ்த்தினர். திரு. இறைபுகழ் [illegible] வாழி இவ் விழா ஒழுங்குகளைச் [illegible] செய்ததுடன் சொற்பொழிவுமாற்றினர்.


'ஹென்றிலி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றிலி

★ சேட் ★ ஷோட்
★ காற்சட்டை ★

ஹென்றிலி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றிலி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றிலி (காமென்ட்ஸ்) லிமிட்டெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை

யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு ஏக விநியோகஸ்தர்க்ள்:
ஆதம்பாய் ஸ்ரோஸ்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.